**செய்தி வெளியீடு எண்: 145** **நாள்: 05.03.2013**

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர். வைகை செல்வன் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சராக பதவியேற்றவுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதன் முறையாக அத்துறையின் ஆய்வை தமிழ்நாடு பாடநூல் கழக கூட்டரங்கில் மேற்கொண்டார்.

பள்ளிக் கல்வித் துறைவாரியான செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகளைக் கேட்டறிந்தார். 12–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் சிறப்பாக நடத்திட வேண்டும் எனவும் இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் அனைவரும் தேர்வு பணிகளை நேரில் சென்று மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த நலத்திட்டங்களை விரைவாகவும், சிறப்பாகச் செயல்படுத்திடவும், அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டங்களை நடத்திடவும் ஆலோசனை வழங்கினார்.

இவ் ஆய்வின்போது பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலர் திருமதி. த. சபிதா, இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர், திரு. சுர்ஜித் கே சவுத்திரி இ.ஆ.ப., அனைவருக்கும் கல்வி திட்ட இயக்குநர் திரு. முகமது அஸ்லம், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திரு. சண்முகவேல்ராஜ், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த அனைத்து இயக்குநர்கள் மற்றும் அனைத்து இணை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**